# 79வது சுதந்திர தினம் : முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கிய விருதுகள்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.8.2025) சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை முகப்பில் நடைபெற்ற சுதந்திரத் திருநாள் விழாவில், மகளிர் நலனுக்காக பணியாற்றிய சிறந்த சமூக சேவகருக்கான விருதினை திருமதி பாகீரதி ராமமூர்த்தி அவர்களுக்கு வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் உள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.8.2025) சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை முகப்பில் நடைபெற்ற சுதந்திரத் திருநாள் விழாவில், கட்டட வரைபட அனுமதிகளை எளிதாக்கியதற்காக முதலமைச்சரின் நல் ஆளுமை விருதினை வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, நகர் ஊரமைப்பு இயக்குநர் பா. கணேசன், ஆகியோருக்கு வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.8.2025) சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை முகப்பில் நடைபெற்ற சுதந்திரத் திருநாள் விழாவில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் நலத்திட்டங்களை சிறப்பான முறையில் செயல்படுத்தியதற்காக முதலமைச்சரின் நல் ஆளுமை விருதினை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திருமதி க.லட்சுமி பிரியா, ஆதி திராவிடர் நல ஆணையர் த. ஆனந்த், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி, பழங்குடியினர் நல இயக்குநர் ச. அண்ணாதுரை ஆகியோருக்கு வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் உள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.8.2025) சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை முகப்பில் நடைபெற்ற சுதந்திரத் திருநாள் விழாவில், கன்னியாகுமரி மாவட்டத்தில், விவேகானந்தர் பாறை நினைவிடம் மற்றும் திருவள்ளுவர் சிலையை இணைக்கும் கண்ணாடிப் பாலம் அமைத்து, சுற்றுலா துறையை மேம்படுத்தியதற்காக முதலமைச்சரின் நல் ஆளுமை விருதினை நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை செயலாளர் மரு. இரா. செல்வராஜ் அவர்களுக்கு வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் உள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.8.2025) சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை முகப்பில் நடைபெற்ற சுதந்திரத் திருநாள் விழாவில், சமுதாய பங்கேற்பு மூலம் மாற்றத்தைக் கொண்டுவரும் ஊரக மேம்பாட்டு முயற்சிகளுக்காக முதலமைச்சரின் நல் ஆளுமை விருதினை உதவி காவல் கண்காணிப்பாளர் மரு. வி.பிரசதிரு. ப.பாலகிருன்ன குமார், வட்டாட்சியர் பாலகிருஷ்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி வீ.யமுனா ஆகியோருக்கு வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் உள்ளார்.

### எந்த சுதந்திர நாட்டிலாவது ‘பிறவி பேதம்’ - ஜாதி உண்டா? சுடுகாட்டிலும் பேதம் உள்ள நிலையில், சுதந்திரம் எங்கே?

## தீண்டாமை - ஜாதி ஒழிந்து சமத்துவம் நிலவும்போதுதான் ‘உண்மையான சுதந்திரம்’ விடியும்?

### திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஆக.17-

பிறப்பின் அடிப்படையில் பேதம் நிலவும் ஒரு நாட்டில், உண்மையான சுதந்திரம் என்று கூறி, எப்படிக் கொண்டாடுவது? சமூக நீதி, சமத்துவம் என்ற நிலை உருவாகும்போதுதான் உண்மையான சுதந்திரம் - கொண்டாட்டம் என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



**எந்த நாட்டிலாவது பிறப்பின் அடிப்படையில் பஞ்சமன், சூத்திரன் உண்டா?**

இன்று (ஆகஸ்ட் 15 ) ‘சுதந்திர நாள்’, 79 ஆவது ‘விடுதலை நாள்’ என்று கொண்டாடப்படுகிறது- அரசுகளால் - ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால்; ஆனால், உண்மையில் குடிமக்கள் அனைவரும் - மற்ற பல நாடுகளிலும் மகிழ்ச்சியுடனும், மன நிறைவுடனும் கொண்டாடும் மன நிலையில் இருக்கிறார்களா? என்பது முதற்கேள்வி.

உலகில் ‘சுதந்திரம்’ பெற்ற எந்த நாட்டிலாவது மனிதர்களை இழிவுபடுத்தி, “பஞ்சமன்”, “சூத்திரன்”, “தொடக்கூடியவர்கள் - தொடக்கூடாதவர்கள்'' (Untouchables), “நெருங்கக் கூடியவர்கள் - நெருங்கக் கூடாதவர்கள்” (Unapproachables) “மேல்ஜாதி என்பவர்கள், கண்ணால் பார்க்கக் கூடாத ஜாதியினர்” (Unseeables) என்ற மக்களை பிறவி அடிப்படையில் (அவர்களது அறிவு, ஆற்றல், உழைப்பு காரணமாக அளவீடு செய்து பார்க்காமல்) மதவெறி, வருணம், ஜாதி, குலம், செய்தொழில் - இவற்றின் அடிப்படையிலே பிரித்து, வேற்றுமைப்படுத்திப் பார்க்கும் நிலை உண்டா? வேதனையும், வெட்கமும் படவேண்டிய நிலையில் வேறு எந்த அடிமை நாடுகள்கூட இன்று பூமிப் பந்தில் உள்ளதா இந்தப் ‘புண்ணிய, புனித, பாரத’ ஞானபூமி என்று தம்பட்டம் அடிக்கும் நம் நாட்டைத் தவிர!

**சுடுகாட்டிலும், இடுகாட்டிலும் கூட பேதம் என்ற அவலம்!**

செத்த பிறகு புதைக்கும் இடுகாட்டிலும், எரிக்கும் சுடுகாட்டிலும்கூட - சாவில்கூட மயானத்தில்கூட ‘‘மனிதத்தைத்” தொலைத்துவிட்டு, ஜாதி ஆணவம், பெருமைப் பேசி, வெறிபிடித்து அலையும் கொடுமையைக் காணுவது 79 ஆவது சுதந்திர ஆண்டிலும் தொடரலாமா?

தீண்டாமை ஒழிப்பு, சமத்துவம், சுதந்திரம் எல்லாம் வெறும் ‘ஏட்டுச் சுரைக்காயாக’ அரசியல் சட்ட உறுதி மொழிகளாயினும், வெறும் சடங்காச் சாரமாக புழக்கத்தில் உலா வருகிறது!

நெஞ்சில் கை வைத்து - மனச்சான்று பேசுப வர்களால் கூட உண்மைகளை, யதார்த்தத்தை ஏன் ஒப்புக்கொள்ள முடியவில்லை?

சமத்துவம் அடைய, சரிநிகர் நிலை பெற, சமூகநீதிக்கு மட்டும் ஜாதிக் குறிப்பு நோய்த் தடுப்பு மருந்தில் மிகச் சிறு விஷம் (Poison) சேர்ப்பது போல், தேவைப்படும் நிலையைக்கூட புரிந்துகொள்ளாமல், அதையே உணவாக்கி, ஜாதி வெறியை தங்களது தனி வாழ்வு - விளம்பர வெளிச்சம், தகுதி இல்லாத நிலையிலும், தலைமைப் பிம்பம் இவற்றைக் கட்டி, ஆரிய நரிகள் நாட்டாண்மைக்குக் “கூலிப்படையாக”, தங்களையும், தாங்கள் கொள்கையான சமூகநீதியையும்கூட, அதன் எதிரிகளிடையே விற்றுப் பிழைக்கும் வெட்கக் கேடான நிலைதானே இன்றும் உள்ளது!

எல்லாவற்றிலும் பேதாபேதம் - இந்த நிலையில் சுதந்திரத்தை மகிழ்ச்சியுடன் கொண்டாட முடிகிறதா?

“உள்ளொன்று வைத்துப் புறமொன்றுப் பேசுவோர் உறவு கலவாமை வேண்டும்” என்றார் வள்ளலார்.

‘‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” என்றும், “பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்'', “மெய்ப்பொருள் காண்க” என்றெல்லாம் அறிவுரை கூறினார் திருவள்ளுவர்,

ஜாதி, பெண்ணடிமையை, மூடநம்பிக்கைகளை ஒழித்த பகுத்தறிவு வாழ்க்கை வாழச் சொன்ன புத்தியில், ‘புத்தரான’ சித்தார்த்தன் - இவர்கள் எல்லாம் இன்று இருந்தால், நம் சமூக, பிறவி இழிவு அவமானம்பற்றி நேரில் கண்டால், இதைச் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், ஜனநாயகம் பொங்கும் ‘விடுதலை நாள்’ என்று கொண்டாடுவார்களா? அல்லது துன்பமும், துயரமும் அடைவார்களா?

பொது நிலையில், விருப்பு வெறுப்பு அற்ற நிலையில், மனிதநேயம் - மானிட உரிமைகள் கண்ணோட்டத்தில் இன்று நம்மால் மகிழ்ச்சியில், “ஆடுவோமே, பள்ளுப் பாடுவோமே” என்று பாடும் நிலை உள்ளதா?

அரசியல் சட்டம் மீது எடுக்கப்பட்ட பிரமாண உறுதிமொழிகள், உண்மையில் செயல்படும் செம்மை நிலை உண்டா?

தந்தை பெரியாரின் தொலைநோக்குதானே வெற்றி பெற்றுள்ளது.

“முதியவர் சொல்லும் முது நெல்லிக்கனியும் முன்னே கசந்து, பின்னே இனிக்கும்” என்பது எவ்வளவு அனுபவ உண்மை பார்த்தீர்களா?

**உண்மைச் சுதந்திரம் எப்போது?**

இந்த மதவெறி, ஜாதி வெறிக்கு நாமே விடை காண வேண்டும். ஆணவக் கொலைகளும், ஆணவ ஜனநாயகப் படுகொலைகளும், ஆதிக்க ஜனநாயக அவலங்களும், அடாவடித்தன அரசியல் நாடகங்களும்தான் ‘‘தோரணங்களாகத்'' தொங்கவிடப்பட்டு நடத்தும் விசித்திர விழா நிலைதான் மிச்சம்!

என்று இந்த ஜாதி- தீண்டாமை ஒழிகிறதோ, அன்றுதான் உண்மைச் சுதந்திரம் விடியும் நிலை என்பதே சமூக நீதி, சமத்துவப் போராளிகளின் வேட்கையும், விழைவும்! அந்த இலக்கு நோக்கியே நமது தீராப் பயணம்.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### எங்களுக்குத் தந்த திட்டங்களால் நலம்பெறுவோம் என்ற நம்பிக்கை பிறக்கிறது!

## தூய்மைப் பணியாளர்களுக்கு நலவாரியத்தை உருவாக்கிய முதல்வருக்கு நன்றி!

### சென்னை மாநகராட்சியின் தூய்மைப் பணியாளர்கள் மகிழ்வுக் கடிதம்!

சென்னை, ஆக.17-

பெருநகர சென்னை மாநகராட்சியின் பல்வேறு ஊழியர் தொழிற்சங்கங்கள் மற்றும் தூய்மை பணியாளர்களின் மகிழ்வுக் கடிதம் வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு,

தூய்மை பணியாளர்களான எங்களுக்கு, எங்கள் நலனுக்காக அரசு அறிவித்த புதிய திட்டங்கள் மற்றும் சிறப்பு நடவடிக்கைகளுக்கு மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்கிறோம். நீங்கள் எங்களுக்கு தந்த திட்டங்களால் நலம் பெறுவோம் என்ற நம்பிக்கை பிறக்கிறது. முத்தாய்ப் பாக தனியாக எங்களுக்கென்று நல வாரியத்தை உருவாக்கியதற்கு, காலம் முழுவதும் நன்றி சொல்வோம்.

* எங்கள் உடல் நலனைக் காக்க தொழில்சார் நோய்களை கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் தனித்திட்டம்,

பணியின் போது உயிரிழக்கும் நிலை ஏற்பட்டால் 10 இலட்சம் ரூபாய் நிதி பாதுகாப்பு,

சுயதொழில் தொடங்குவதற்கான அதிகபட்சம் 3.5 லட்சம் வரை மானிய உதவி மற்றும் குறைந்த வட்டியில் கடன்.

* எங்கள் பிள்ளைகளுக்கு உயர்கல்விக்கான கட்டண உதவி,

* அடுத்த 3 ஆண்டுகளில் 30,000 வீடுகள் வழங்கும் வீட்டு வசதி திட்டம்,

பணியின்போது இலவச காலை உணவு வழங்கும் திட்டம் ஆகியவை எங்கள் வாழ்வாதாரத்தையும், எதிர்கால நலனையும் உறுதி செய்யும் முக்கியமான முன்னெடுப்புகள்.

இந்த திட்டங்கள் எங்கள் வாழ்க்கையில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதில் உறுதியுடன், எங்களை மதித்து எங்களுடைய நீண்ட கால கோரிக்கையினை ஏற்று பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்த தங்கள் தலைமையினை மனமார்ந்த நன்றியுடன் பாராட்டுகிறோம்.

விலைவாசி உயர்வுக்கு ஏற்ப மற்ற துறைகளுக்கும் செய்யப்படுவதைப் போல எங்கள் ஊதியத்தையும் காலத்திற்கு ஏற்ப உயர்த்துவதற்கு, தூய்மை பணியாளர்களை தாய்மைப் பணியாளர்கள் என போற்றுகின்ற எங்கள் முதல்வர் உறுதி செய்வார் என்று ஒட்டு மொத்த தமிழக மக்களும் நம்புவதைப் போல் பெருநகர மாநகராட்சியின் தூய்மை பணியாளர்களும் நம்புகின்றோம்.

இவ்வாறு தூய்மைப் பணியாளர்கள் சார்பில் நன்றி நன்றி நன்றி என அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

## ஜம்மு-காஷ்மீரில் வெள்ளப் பெருக்கு; மேகவெடிப்பு பலி 46 ஆக உயர்வு!

டேராடூன், ஆக.17-

உத்தராகாண்ட் மற்றும் இமாச்சலப் பிரதேசத்தைத் தொடர்ந்து, ஜம்மு-காஷ்மீரில் மேக வெடிப்பால் ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கில் சிக்கி 46 பேர் பரிதாபமாக உயிரிழந்த நிலையில், மீட்புப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. உத்தரகண்ட் மாநிலம், இமாச்சலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் ஏற்பட்ட மேகவெடிப்பு பேரழிவுகளைத் தொடர்ந்து, தற்போது ஜம்மு-காஷ்மீரின் கிஷ்த்வார் மாவட்டத்தில் உள்ள சோசிட்டி கிராமத்தில் மேகம் வெடித்து பெரும் துயரம் நிகழ்ந்துள்ளது.

இந்த கோர சம்பவத்தில் இதுவரை 46 பேர் உயிரிழந்துள்ளனர், அவர்களில் இருவர் மத்திய தொழிலகப் பாதுகாப்புப் படை வீரர்கள் ஆவர். மேலும், 160 பேர் காயமடைந்துள்ள நிலையில், 300க்கும் மேற்பட்டோரைக் காணவில்லை. மாநில முதல்வர் உமர் அப்துல்லா, இதுகுறித்து உள்துறை அமைச்சர் அமித்ஷாவிடம் நிலைமையை விளக்கியுள்ளார். இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ள ஒவ்வொரு உயிரையும் மீட்க மீட்புப் படையினர் பல மணி நேரமாகப் போராடி வருகின்றனர். ஆனால், தொடர் மழையும், சேறும் மீட்புப் பணிகளுக்குப் பெரும் தடையாக உள்ளன. மேக வெடிப்பால் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளப் பெருக்கும், சகதி மற்றும் இடிபாடுகளும் கிராமத்தையே சிதைத்துள்ளன.


